உ
சிவமயம்

Nsvt
aperin Ceylon
P. M. G. NO. H. A
49/300 of 1939.

இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதேன்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை போய்கையும் போன்றதே, ஈசனேந்தை யிணையடி [நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஸு புரட்டாதி மீ உஅ உ (1947 ஒக்டோபர் 14 செவ்வாய்க்கிழமை) [இல ருந.

பிரார்த்தனை

பூரணி புராதனி சுமங்கலை சுதந்தரி புராந்தகி த்ரியம்பகி யெழிற்
புங்கவி விளங்குசிவ சங்கரி சகஸ்ரதள புஷ்பமிசை வீற்றிருக்கும்
நாரணி மனுதீத நாயகி குணாதீத நாதாந்த சத்தியென்றுன்
நாமமே யுச்சரித் திடுமடியர் நாமமே நானுச் சரிக்க வசமோ
ஆரணி சடைக்கடவுள் ஆரணியெனப்புகழ அகிலாண்ட கோடியீன்ற
அன்னையே பின்னையுங் கன்னியென மறைபேசும் ஆனந்த ரூபமயிலை
வாரணியும் இருகோங்கை மாதர்மகிழ் கங்கைபுகழ் வளமருவு [தேவையரசே
வரைரா சனுக்கிருகண் மணியாய் உதித்தமலை
வளர்கா தலிப்பெண் உமையே.
—தாயுமானார்

சைவம் வளர்த்த செம்மல்

குலச் சிறையரின் சமயப் பற்று

திருமயிலை திருவாளர்
சே. வெ. ஜம்புலிங்கம்பிள்ளை

குலச்சிறையார் அறியான் மும்மை நாயன்மார்களுள் ஒருவர். பாண்டிநாட் டரசனாகிய கூன்பாண்டியனாகிய முதல் மந்திரியாகிய விளங்கியவர். அவ்வரசன் ஊழ்வினையின் பயனாகச் சைவசமயத்தைப் புறக்கணித்துச் சமணர்களின் துர்ப்போதனைகளுக் கிணங்கி அச்சமயத்தை வளர்ப்பதில் பேரூக்கங் காட்டினான். "மன்னவனெப்படி மன்னுயிர்ப்படி" என்ற பழமொழிக் கொப்ப சமண சமயம் பாண்டி நாடெங்கும் பரவுவதாயிற்று. இதைக் கண்ட நமது நாயனாரும் அரசனுடைய மனைவியாரும் சுவபக்தியிற் சிறந்தவருமாகிய மங்கையர்க்கரசியாரும் பெரிதும் வருந்துவாராயினர். பரசமய கோளரி சம்பந்தரின் அற்புதச் செயல்களைக் கேள்வியுற்று அவரைத் தங்கள் நாட்டிற்கு அழைப்பித்து அவர் மூலமாக மங்கியிருந்த சைவ ஒளியைப் பரவச் செய்தனர். இவருடைய முயற்சியால் அரசன் மீண்டும் சைவசமயத்திற் பிரவேசித்ததன்றி அவனுக்கு இயற்கையாயிருந்த கூனும் நீங்கிக் கூன்பாண்டியன் என்ற பெயர் போய் நின்றசீர் நெடுமாறனானான்.

தொடர்ச்சி 6-ம் பக்கம்

சீனி விலை

அதிகரிக்க மந்திரி மறுப்பு

அரிசி மா என்பவற்றை இறக்குமதியாக்கி ஊரவர்களுக்குக் குறைந்த விலைக்கு விநியோகம் செய்வதால் அரசாங்கத்துக்கு ஆண்டுதோறும் பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. அதனைச் சரிப்படுத்துதற்காக சீனி மீதுள்ள விலையை அதிகரிக்கலாம் என்ற ஆலோசனை உணவு மந்திரியான மிஸ்டர் ரத்னாயக்காவுக்குச் சொல்லப்பட்டது. அப்படி விலையை அதிகரித்தால் தினந்தோறும் அரசாங்கத்துக்கு 50,000 ரூபா ஆதாயம் கிடைக்குமெனக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

ஆனால் உணவு மந்திரிக்கு இப்படியாகச் சீனிவிலையை உயர்த்துவது விருப்பமில்லையென்று தெரிகிறது.

இலங்கையில் மாதந்தோறும் 7,200 தொன் சீனி செலவாகிறது.

தேசியக் கொடியல்ல!

அலங்காரத்துக்கே பெற்றனர்

50,000 சிம்மக் கொடிகளை அரசாங்கம்பெற்று, புதிய பாராளுமன்ற அங்குரார்ப்பணத்தினபோது ஆரோகணிக்க நிச்சயித்திருந்தமை சிறுபான்மை மக்களுக்கு மனக்கொதிப்பைக் கொடுத்திருக்கிறது. இலங்கைக்கென ஓர் தேசியக்கொடியை எல்லாச் சமூகத்தினரதும் அநுசரணையின் பேரில் நிர்மாணிக்கமுன், சிங்களர்க்கு மாத்திரமுரிய சிங்கக் கொடியை இலங்கையின் தேசியக் கொடியென, அதிகாரம் வகித்துள்ள சிலர் நிர்ணயித்தல் முறையல்லவென்று இவர்கள் கருதுகின்றனர்,

யாழ்ப்பாணம் நகரசபைத் தலைவர் திரு. க. பொன்னம்பலமும், தேசியத் தமிழர் சங்கத் தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகமும், சிங்கக் கொடியைத் தேசியக் கொடியாக்க முனைவதையிட்டு ஆட்சேபித்து மிஸ்டர் சேனனாயக்காவுக்கும் மந்திரசபையில் அங்கத்துவம் பெற்றிருக்கும் ஸ்ரீமான்கள் ஸி. சிற்றம்பலம், ஸி. சுந்தரலிங்கம் என்பவர்களுக்கும் தந்தியனுப்பினர். புதிய பாராளுமன்றம் கூடி இலங்கைக்கு வேண்டிய தேசியக்கொடியை நிர்மாணிக்கமுன், சிங்களரின் சாதீயக் கொடியாகிய சிம்மக் கொடியைத் தேசியக் கொடியாகத் திணித்தல் முடியாதென்று ஷை இருவரும் தந்தியிற் குறிப்பிட்டனர்.

அத்தந்திக்கு ஸ்ரீ ஸி. சிற்றம்பலம் பின்வருமாறு பதில் அனுப்பியுள்ளார்:—

சிங்கக்கொடி தேசியக்கொடியல்ல. அலங்கரிப்பதற்கு [illegible] மாத்திரமே [illegible] கொடியாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறதாகப் பிள்ளையார்.

இலங்கையின் தேசியக் கொடி எவ்வாறு இருக்கவேண்டுமென்பது புதிய பாராளுமன்றத்தினால் நிர்ணயிக்கப்படும்.

தான் இவ்விஷயத்தில் முயற்சி செய்வதாக ஸ்ரீ ஸி. சுந்தரலிங்கம்

பராசக்தி பூஜை

ஆக்கி அழிக்கும் அன்னை மகத்துவம்

நவராத்திரியின் தத்துவம்

சக்தி வழிபாடு எதற்கு

உலகம் உய்ய உண்மை தழைக்க

(மகாகவி பாரதியார்)

ஒன்பது இரவு பராசக்தியைப் பூஜை செய்கிறோம். லட்சுமி என்றும், சரசுவதி என்றும், பார்வதி என்றும் மூன்று மூர்த்தியாக நிற்பது பராசக்தி. இவ் வுலகத்தை ஆக்கல், அழித்தல், காத்தல் என மூன்று தொழில் நடத்துவது சக்தி.

இமாசலம் தொடங்கிக் குமரிமுனை வரை, வேதத்தை நம்பும் கூட்டத்தார் எல்லாரும் இந்தப் பூசை செய்கிறோம். ஏழைகளாக இருப்போர் பராசக்திக்கு மலரையும், நீரையும், மனத்தையும கொடுத்து வலிமை பெறுகிறார்கள். செல்வமுடையோர் விருந்துகளும் விழாக்களும் செய்கின்றனர். பக்தி செய்யும் செல்வரும் உண்டு.

மஹாளய அமாவாஸ்யை கழிந்தது, இருளும் ஒளியும மாறி மாறி வருவது இவ்வுலக இயற்கை. பகலிலே பெரும்பாலும் ஒளியுண்டு. மேகங்கள் வந்து சூர்யனை மறைத்தாலொழிய; சில சமயங்களில் கிரகணம் பிடிக்கும். அதையும் தவிர்த்து விட்டால், இரவிலேதான் ஒளியின் வேறுபாடுகளும் மறைவுகளும் அதிகப்படுகின்றன. பகல் தெளிந்த அறிவு: இரவென்பது மயக்கம். பகலாவது விழிப்பு; இரவாவது தூக்கம். பகலாவது நல்லுயிர்கொண்டு வாழ்தல். இரவு லயம். மஹாளய அமாவாசை ஒழிந்துவிட்டது.

சக்தி, நல்ல வல்லெழுத்துச் சேர்ந்த மொழி. விக்ரமாதித்தனும் காளிதாஸனும வணங்கிய தெய்வம். "உலகத்தார் இந்தப் பராசக்தியை நல்ல மழை யருள்புரியும் சரத்காலத்தின் முதல் ஒன்பது இரவும் வணங்கி பூஜைசெய்ய வேண்டும்" என்பது பூர்விகர் ஏற்பாடு; மிகப் பயனுடைய காரியம். மேலான வழி. கும்பகோணம் சங்கர மடத்தில் இந்த பூஜை மிகவும் கோலாகலமாக நடத்தப் போவதாகப் பத்திரிகையில் ஒரு தந்தி போட்டிருந்தது சகஜமான விசேஷம். தேச முழுவதும் இப்படி நடப்பது நல்லது.

கும்பகோணத்துத் தந்தி பேசுகிறது. "இந்தப் பூஜையின் நோக்கம் உலகநன்மை. நவராத்திரி காலத்தில் யோகமாயை, துர்க்கை, லட்சுமி, சரசுவதி என்ற மூன்றுவித வடிவங்கொண்டு துஷ்டரை எல்லாம் அழித்து மனித ஜாதிக்கு மகிழ்ச்சி பெருகவைத்தாள். மனிதர் படும் துன்பத்தைத் தீர்க்கும் பொருட்டாக தேவி அவ்வாறு அவதாரம் செய்த காலமுதல் இன்றுவரை பாரத தேயத்தில் எல்லாப் பக்கங்களிலும் மக்கள் இந்தத்திருவிழாவைக் கொண்டாடி வருகிறார்கள. தேவி உலகம் முழுவதிலும் பரவி யிருக்கிறாள். ஒவ்வொரு தனிப்பொருளிலும் நிறைந்து நிற்கிறாள். இவளே மாயை; இவளே சக்தி: செய்பவளும், செய்கையும், செய்கைப் பயனும் இவளே; தந்தையும் தாயும் இவள்; இவளே பரப்பிரம்மத்தின் வடிவம். இவள் காத்திடுக" என்பது தந்தி.

உண்மைதான். ஆனால், "தேவி அவ்வாறு அவதாரம் செய்த காலம் முதல்" என்ற வாக்கியம் மாத்திரம் கதை. தேவி எப்பொழுதும் அந்த வடிவங்களிலே நிற்கிறாள். ஆக்கல், அழித்தல், காத்தல் என்ற முத்தொழிலும் எப்போதும் நடக்கின்றன. லோக சம்ரட்சணை எப்போதும் நடைபெறுகிறது. எப்போதுமே ஆராதனை செய்யவேண்டும். சரத் காலத் தொடக்கத்திலே பேரூளைக் கண்டு விசேஷ விழா நடத்துகிறோம். தவம், கல்வி தெய்வத்தைச் சரண் புகுதல்- இம் மூன்றும் கர்மயோகம் கிரியா யோகம் என்று பதஞ்சலி முனிவர் சொல்லுகின்றார். லௌகிகக் கவலைகளாலே இம்மூன்று தொழிலையும் எப்போதும் செய்துகொண்டிருக்க முடியாமல் தடிக்கப்படும் சாமானிய ஜனங்கள் நவராத்திரி ஒன்பதுநாள் இரவும் பகலும் மேற்கூறிய மூவகை நெறியில் நிலைபெறும் வண்ணமான விதிகள் ஆகமங்களிலே கூறப்பட்டன.

ஒன்பதுநாளும் தியானம் கல்வி, தவம் இவற்றிலே செலவிடத்திறமையில்லாதோர் கடைசி ஒன்பதாம்நாள் மாத்திரமேனும் விரதம் காக்கவேண்டும். இந்தப் பூஜையின் பொருள் மிகவும் தெளிந்தது.

சக்தியால் உலகம் வாழ்கிறது; நாம் வாழ்வை விரும்புகிறோம்; ஆதலால் நாம் சக்தியை வேண்டுகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKSA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்து ௵ புரட்டாதி உஅஉ செவ்வாய்க்கிழமை

காங்கேயன்துறை வைத்தியசாலை விவகாரம்

"பழையபடி வேதாளம் முருக்கமரத்தில் ஏறிக்கொண்டது" என்ற ஒரு வாக்கியம் விக்கிரமாதித்தன் கதையில் இடையிடையே வந்துள்ளதென்பர்; அதே போல, காங்கேசன்துறையிலுள்ள அரசினர் சாதாரண நோயாளர் வைத்தியசாலையை, மூந்தி யுத்தேசித்திருந்த பிரகாரம் கயரோக வைத்தியசாலையாக்கவேண்டுமென்ற முயற்சி இப்பொழுது தொடங்கிவிட்டது; முயற்சி தொடங்கியதோடு மாத்திரம் நின்றுவிடாமல், யாழ்ப்பாணத்துள்ள கயரோகிகள் வைத்தியசாலைப் பக்கத்திற் கிடந்த சிலரை, காங்கேசன்துறையிலுள்ள சாதாரண நோயாளிகள் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கும்படி கட்டளை பிறந்துவிட்டதென்றும் அறியலானோம். அதிகாரிகளுட் சிலர் செய்யத்துணிந்த இச்சுயேச்சையான செயல் காரணமாக, யாழ்ப்பாணத்தின் வடபகுதியாகிய காங்கேயன்துறைப் பகுதியில் மாத்திரமல்ல, யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதிலும் வசிக்கும் மக்களிடையே பெருங் கிளர்ச்சியுண்டாக்கியிருக்கிறது.

இற்றைக்கு இரண்டு வருடங்கட்கு முந்தி, அதாவது காங்கேயன்துறையிலுள்ள குறித்த கட்டடம், இராணுவ வைத்தியசாலையாகவிருந்து, அவர்களால் விடப்பட்ட காலத்தில், இக்கட்டடத்தைச் சாதாரண நோயாளிகளை வைத்துப் பரிகரிக்கும் அரசினர் வைத்தியசாலை யாக்குவதோ, இல்லையேல் கயரோக வைத்தியசாலை யாக்குவதோ என்ற விவகாரம் எழுந்ததும், ஆங்கில டக்டர்மார் பலரும் மற்றைச் சமயத்தினருட் பலரும் ஒவ்வோர் காரணம் பற்றிப் போலும், அக் கட்டடத்தைக் கயரோக வைத்தியசாலையாக்கி விடல்வேண்டுமென்று சாதிக்க, சைவமக்களுள் மிகப் பலரும் இங்குள்ள ஆயுள்வேத வைத்தியர்கள் தமிழ் வைத்தியர்கள் எல்லோரும் அதனை யாழ்ப்பாணத்துள்ள சிறந்த சாதாரணநோயாளர் அரசாங்க வைத்தியசாலையாகத் தாபித்துவிடவேண்டுமெனச் சாதித்தும், பின்னர் அதற்கெனச் சமயோசிதமாக நியமித்த விசாரணைச் சங்கத்தில் பல விசாரணைகள் நடத்தியபின்னர் குறித்த கட்டடம் சாதாரண ரோகிகட்காய சிறந்த அரசினர் வைத்தியசாலையாகத் தாபிக்கப்படல்வேண்டுமென நிச்சயிக்கப்பட்டதும் இங்குள்ளார் பலரறிந்த விஷயம்; அந்த நேரத்தில் இவ்வியாழ்ப்பாணத்துள்ள சைவமக்கள் எடுத்துக் காட்டிய பிரதான நியாயம், குறித்த வைத்தியசாலைக் குரிய கட்டடம் இலங்கை முழுவதிலும் சிறந்த புண்ணிய சமுத்திர சங்கம தீர்த்தமாகிய கீரிமலைத் தீர்த்தத்திற்கு மிகவும் அண்மையாயிருத்தலினால், தினந்தோறும் அத்தீர்த்தத்திலே சென்று மூழ்கும் மக்களுக்கும் ஆடியமாவாசை முதலிய விசேஷ காலங்களில் அக்கீரிமலைத் தீர்த்தத்தில் வந்து மூழ்கும் பல்லாயிரக் கணக்கான மக்களுக்கும் இடையூறாய் முடியுமென்பதாம். இந்த ஆட்சேபங்களை யெல்லாங் கேட்டு அக்காலத்தில் இங்கு வந்து விசாரணை நடத்திய விசாரணைச் சபையார், குறித்த கட்டடத்தைக் கயரோக வைத்தியசாலையாக்காது, சாதாரண ரோக வைத்தியசாலையாக்கவேண்டுமென்று மேலதிகாரிகட்குத் தங்கள் அபிப்பிராயத்தைச் சொல்ல அவர்கள் அப்படியே சாதாரண ரோக வைத்திய சாலையாக அந்நாட்டொட்டு இற்றை வரையில் நடத்திவந்தார்கள்.

ஆனாலும் அன்று தொட்டு இற்றைவரையில், மேற்படியொழுங்கிலே திருப்தி யடையாமக்கள் சிலர் இலைமறை காய்போல் இங்கே சமயம் பார்த்துக் கொண்டு இருந்துள்ளன ரென்பது இப்பொழுதுதான் புலப்படுகிறது; அரசாங்கசபைப் பரிபாலனகாலம் முடிந்து புதிய பாராளுமன்றப் பரிபாலனம் தொடங்குதற் கிடையி லுள்ள சில வாரங்களாகிய இந்தச் சமயத்தைத் தவறவிடாது சூழ்ச்சிக்காரர் சிலர் கருமமாற்றத் தலைப்பட்டுள்ளனரென அறியக் கிடக்கின்றது. பழைய சுகாதார மந்திரியாகிய மிஸ்ரர் ஜோர்ஜ் ஈ. டீ. சில்வா என்பவர் யாழ்ப்பாணம் அரசினர் வைத்தியசாலையில், ஆரம்பக் கயரோகிகட்குள்ள பகுதியில் வைத்துச் சிகிச்சை செய்யப்படும் கயரோகிகள் சிலரை, காங்கேயன்துறையிலுள்ள குறித்த இந்த வைத்தியசாலைக்கு அகற்றும்படி கட்டளைசெய்ய இங்குள்ள அதிகாரிகள் அப்படியே செய்யத் தொடங்கிக் கொண்டனராம்; இதுமாத்திர மல்லாமல் இலங்கையிலுள்ள எந்தவூரில் வசிப்பவர்கட்கேனும் கயரோகம் கண்டால், அந்நோயாளிகளை யெல்லாம் வடமாகாணத்தின் அந்தமாகவுள்ள காங்கேயன்துறையி லிருக்கும் இந்த வைத்தியசாலைக்குத்தான் ஏற்றுமதி செய்யப்படுவரென்ற ஒரு செய்தியும் இங்கு பரவலாயிற்று.

இவைகளை யெல்லாங் கண்டுங் கேள்வியுற்றும் யோசித்துமே இங்குள்ள மக்கள் இந்த விஷயத்திற் பெருந் திகில் கொண்டு இதனைத் தடுத்துவிடுதற்கான முயற்சிகள் செய்கிறார்கள்; இதனைத்தடுத்தற்கு இங்குள்ள மக்கள் இப்பொழுது செய்யும் முயற்சிகள் பல; சென்றவாரம் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாரின்வருடாந்தக் கூட்டம் கூடியபோது, இங்குள்ள மக்கள பலருடைய ஆவலோடுகூடிய வேண்டுகோளின்படிமேற்படி வைத்தியசாலையைக்கயரோகிகள் வைத்தியசாலையாக்கவொண்ணாதென்ற கருத்தமைந்த ஒருநிர்ணயம் இச்சபையின்மகா கூட்டத்தில் ஏகசம்மதமாக நிறைவேற்றி மலதிகாரிகளுக்கும் புதிய சனப்பிரதிநிதிகள் மந்திரிமார் சிலருக்கும் தந்திமூலம் தெரிவிக்கப்பட்டது; இங்குள்ள பரஸ்பர நன்மை விருத்திச் சங்கத்தினரும் ஒரு மகா கூட்டங் கூட்டி ஒரு தடைநிர்ணயத்தை நிறைவேற்றி மேலதிகாரிகளுக்குத் தெரிவித்துள்ளனர்.

இத்தடைகளின் பயனாக இப்பொழுதுள்ள சுகாதாரமந்திரியாகிய மிஸ்ரர் S. W. R. D. பண்டாரநாயக்கா குறித்த விஷயமாக எவ்வகைபான மாறுதலும் செய்யவேண்டாம், இருந்தபடியிருக்கட்டும்; எல்லாம் யோசித்துச் செய்யலாம் என்னுங் கருத்தமைந்த கட்டளையை இங்குள்ள வைத்தியப் பகுதி அதிகாரிக்குத் தெரிவித்திருக்கிறாரென இப்பொழுது அறியலானோம்; மேலும் காங்கேயன்றுறைப் பகுதிப் பாராளுமன்றத்துப் பிரதிநிதியாகிய திரு. S. J. V. செல்வநாயகம், யாழ்ப்பாணப் பட்டினப் பகுதிப் பிரதிநிதியாகிய G G பொன்னம்பலம், மந்திரியாகிய திரு. C சுந்தரலிங்கம் என்னு மிவர்களும் இவ் விஷயத்திலே தாங்கள் சிரமம் பூண்டு தககவாறு செய்வதாக யாழ்ப்பாணஞ் சைவபரிபாலன சபைக் காரியதரிசிக்கு விடைகூறி யுள்ளன ரென அறிகின்றோம்.

வெள்ளையர் வேண்டாம்!

இவர்களால்தான் சதிவேலை?

இந்தியாவிலே வகுப்புத் துவேஷங்களைப் பரப்பி வைத்தவர்கள் வெள்ளைக்காரர்: பூரண சுயராச்சியத்தை இந்தியா பெற்றபின், நேரு அரசாங்கம் இந்த வெள்ளை உத்தியோகத்தர் பலரை வேலைக்கு வைத்துக் கொழுத்த சம்பளம் கொடுத்திருப்பவும், இந்த நன்றிகெட்டவர்கள் சதிவேலைகளை இரகசியமாகச் செய்யவில்லையா? இந்தப் பெரிய நேரு, படேல் போன்றவர்களுக்கு "டிமிக்கி" கொடுத்துத் தமது கிருத்திரம நாடகங்களைப் புரிந்துவரும் வெள்ளையர், சுயராச்சியம்பெற்ற இலங்கையில், சுண்டைக்காய் போன்ற நமது அரசியல் வாதிகளைச் சும்மா விடுவார்களா? ஆகவே, இந்த வெள்ளை உத்தியோகத்தர்களை எல்லாம் இப்போதே மூட்டை முடிச்சுகளுடன் வெளியேற்றி விடவேண்டும் என்றும் கொழும்பு "லிற்றி நியூஸ்' பத்திரிகை கூறுகிறது. அது மேலும கூறுவதாவது:

"ஓர் காலத்திலே இலங்கை உத்தியோகம் முழுவதும் இலங்கையர் மயமாக வேண்டும் என்று போராடிய மிஸ்ரர். சேனனாயக்கா, இன்று வெள்ளை உத்தியோகத்தர் இங்கே நிற்க வேண்டுமென்று அவர்களுக்கு முன் சாஷ்டாங்கம் போட்டு வேண்டிக் கொள்ளுகிறார்; இந்தியத் தலைவர்களுக்கும் மிஸ்ரர். சேனனாயக்கா போல்வாருக்கும் அநேக வித்தியாசங்கள் உள என்பதை மறப்பதற் கில்லை. இந்தியத் தலைவர்களோ தாம்பெற்ற சுதந்திரத்தை அபிவிருத்தி செய்து, பாரதநாட்டை உலக முன்னணியிற் கொண்டு வர முயற்சிக்கிறார்கள். ஆனால் சேனனாயக்காக் கூட்டமோ, ஜனங்களுக்குத் தெரியாமல், ஒளித்துப் பதுங்கி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியவாதிகளிடம் மண்டிபோட்டு, அவர்களுடன் ஓர் ஒப்பந்தம பேசி வருகிறது. தங்கள் கிருத்திரமத்துக்கு உதவியாகப் பிரித்தாளும் தந்திரமுடைய வெள்ளைக்கார உத்தியோகத்தர் இருக்க வேண்டுமென்பது சேனனாயக்கா கோஷ்டியின் தந்திரம். அல்லாவிட்டால், கொலின்ஸ், பஸற், லாங்ட்றீ முதலாம் வெள்ளைக்காரரின் சேவை இனியும் எதற்கு? கொலின்ஸ் கட்டாயமாக இளைப்பாற வேண்டிய வயதை அடைந்த பின்னரும்; சேனனாயக்காக் கூட்டத்துக்கு ஆலோசகராக வைத்திருக்க வேண்டியதன் அர்த்தம் என்ன? இலங்கையில் உள்ள அரசாங்க உத்தியோகத்தர்களால் மிகவும் வெறுக்கப்பட்டவர் தான் கொலின்ஸ். இவரால்தான் கிளார்க்மாரின் வேலை நீறுத்தமும் ஏற்பட்டது. அப்படிப்பட்ட இந்த மகானுபவரை இனியும் வைத்திருக்க வேண்டியதன் காரணம் என்ன?

"லாங்க்ட்றீ, பஸற் போன்றவர்கள் முந்திய பொது வேலை நிறுத்தத்தில் சேனனாயக்காவுக்குப் போதிய உதவி கொடுத்தவர்கள். இனியும் இத்தகைய துரோக வேலைகளுக்குத் தாம் உதவி செய்யலாம் என்று ஆவர்கள் இங்கே அட்டைபோல ஒட்டிக்கொண் டிருக்கிறார்கள் போலும்! ஆனால் அதிர்ஷ்டவசமாக சேனனாயக்காவின் அரசாங்கமே அந்தரத்தில் தொங்கிக் கொண் டிருக்கிறது. அதன் முடிவுகாலம், இன்றோ, நாளையோ, இன்னும் சில திங்களிலோ ஆகும். ஆகவே, வெற்றுடை தரித்த இந்த வெள்ளைக்காரப் "பொலிஸ்" புலிகளின் சேவை முடிய வேண்டிய காலமும், அவர்களின் கும்மாளம் ஒழியுங் காலமும் சீக்கிரம் வரப் போகிறது.

"இப்போதே பல வெள்ளைக்கார உத்தியோகத்தர் மூட்டைமுடிச்சுடன் கிளம்புவதாகத் தெரிகிறது. மிஸ்ரர். ஏ. வீ. எம். ஹிங்கிவி என்பவர் கெனியாப் பிரதேசத்தில் ஓர் உத்தியோகம் தேடிக் கொண்டதாகக் கேள்வி: மற்றும் வெள்ளைக்காரரும் அப்படியே வேறு இடங்கள் இப்போதே சம்பாதித்துக் கொண்டால் நல்லது. மிஸ்ரர் சேனனாயக்காவைச் சுற்றி வெள்ளம் கரைபுரண்டு வருகிறது. அவருடன் நின்றால் கட்டாயம் அந்தப் பொல்லாத வெள்ளத்தில் அமிழ்ந்துவது நிச்சயம். அதற்கு முன்னரே தப்பிக்கொள்வது நலம்"

——

சொற்பொழிவு

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை ஆதரவில் நிகழும் சர்வசித்து வருஷம் புரட்டாதி மாசம் உகூ-ந் திகதி (15-10-47) புதன்கிழமை மாலை 6-30 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் விருதை முத்தமிழ்ப் புலவர் திரு. ஈ. கண்ணன் அடிகள் அவர்கள் "அருணகிரியும், அறுமுகன் அருளும்" என்னுங் பொருள்பற்றி ஓர் ஆராய்ச்சி இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள்.

இவர் சென்ற சிலகாலமாக கொழும்பு கண்டி, திரிகோணமலை முதலிய இடங்களிற் செந்தமிழ்ப் பிரசங்கங்கள் நிகழ்த்தி அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருக்கின்றனர்.

நிறுத்து!

சுகாதாரமந்திரியின் உத்தரவு

காங்கேசன்துறையில் உள்ள பெரிய ஆஸ்பத்திரியைக் கசநோயாளர் ஆஸ்பத்திரியாக்கக்கூடாது என்று முந்திய அரசாங்கம் தீர்மானித்திருந்தது. அரசாங்கசபை கலைந்ததும், காங்கேசன்துறைக் கசஆஸ்பத்திரியில் உள்ள கசநோயாளிகள் மெல்ல மெல்லவாக அங்கே அனுப்பப்பட்டனர். இந்த அடாத செயலைக் கண்டித்து, சென்றவாரம் யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையுட்பட பல பொதுஸ்தாபனங்கள் அரசாங்கத்துக்கும் வடமாகாணப் பிரதிநிதிகளுக்கும் தந்திக்கு மேல்தந்தி அனுப்பியுள்ளனர்.

ஸ்ரீ ஜீ ஜீ, பொன்னம்பலம், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் என்பவர்கள் இவ்விஷயத்தைச் சுகாதார மந்திரியான மிஸ்ரர் பண்டாரநாயக்காவிடம் எடுத்துக்காட்டி, அரசாங்கத்தின்முந்திய தீர்மானத்துக்கும், பொதுஜன அபிப்பிராயத்துக்கும் விரோதமாக, இந்த அடாத செயல் நடைபெறுகிறது என வற்புறுத்தினர் என்று தெரிகிறது. இதன்பயனாக, தான் இந்தப் பிரச்சினையை நன்கு ஆராய்ந்து ஓர் முடிவுக்கு வரும்வரை, குறித்த காங்கேசன்துறை ஆஸபத்திரிக்குக் கசரோகிகளை அனுப்பக்கூடாது என்று மிஸ்ரர் பண்டாரநாயக்கா இப்போது உத்தரவு பிறப்பித்திருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயம் சமரசம் உண்டாகும்

இந்தியா - இலங்கை தொடர்பு

ஸ்ரீஜவுத் கிரியின் நம்பிக்கை

"ஒரு சிறுகடலினாற் பிரிக்கப்பட்டுள்ள இந்தியாஇலங்கைஇரு நாடுகளும் உண்மையில்சகல விதத்திலும் ஒன்றுதான். ஆகவே அவை இரண்டும் இனியும் பரஸபரம் அபிப்பிராயபேதம் கொண்டிருக்க முடியாது. கூடிய சீக்கிரத்தில் இலங்கை இந்தியத் தொடர்பு தொன்மைபோல நெருங்கியதாக சாஸ்வதமாக இருக்குமென உறுதியாக நம்புகிறேன்.

இவ்வாறு சென்ற சனிக்கிழமை மாலை, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிப் பரிசளிப்பு விழாக் கூட்டத்திற் சமூகமளித்துச் சொற்பொழிவாற்றிய இந்திய அரசாங்கப் பிரதிநிதி ஸ்ரீ ஜவுத் கிரி கூறினார்

தேவார பாராயணத்துடன் பரிசளிப்பு விழா ஆரம்பமாயது. அதன்பின் கல்லூரி மாணவர் ஒருவரால் ஓர் வரவேற்புசாரப் பத்திரம் வாசிக்கப்பட்டது. பிரதமாசிரியர் ஸ்ரீ ஏ. குமாரசுவாமி அவர்களால் கல்லூரி சம்பந்தமான அறிக்கை வாசிக்கப்பெற்றது; ஸ்ரீஜவுத் கிரியின் பாரியார் பரிசில்களை வழங்குவது என ஏற்பாடாகியிருந்தது ஆனால் பலவசதியீனங்களின்பொருட்டு அன்னார் சமூகமளிக்காமையினால், இலங்கையில் இந்திய அரசாங்கத்தில் வர்த்தகப் பிரதிநிதியாயுள்ள ஸ்ரீஜவுத் ஆர். கே. தாண்டன் அவர்கள் பரிசில்களை வழங்கினார்.

பரிசில்கள் வழங்கிமுடிந்ததும், ஸ்ரீ ஜவுத கிரி தம் சொற்பொழிவை ஆற்றினார். யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 50-க்கு மேற்பட்ட ஆண்டுகளாக இந்த ஈழவள நாட்டிற் செய்துவரும் தொண்டைப் பாராட்டிப் பேசி, இத்தகைய தாபனங்கள்மூலமே நாளை எம் தலைவர்களாக வரும் வாலிபர்கள் தம் எதிர்கால வாழ்க்கைக்கு வேண்டிய பயிற்சியைப் பெறவேண்டுமென்று குறிப்பிட்டார்.

நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் பர்மாப் போர்முனையில் அன்று செய்த வீர முழக்கத்தை கல்லூரி மாணவர் ஒருவர் மனனப்பிரசங்கம் செய்ததுபற்றி ஸ்ரீஜவுத் கிரி குறிப்பிட்டுப் பின்வருமாறு கூறினார்:

"இன்று எங்கள் பாரதநாடு சுதந்திரமடைந்துவிட்டது. அந்தச் சுதந்திரத்துக்காக உடல் பொருளாவி முழுவதையும் அர்ப்பணம் செய்தவர்களில் நேதாஜி சுபாஷ்போஸ் ஒருவர். அவர் இன்று இச்சுதந்திர மாளிகையிற் கொலு வீற்றிருக்காமல் இருப்பதுபற்றி நான் உண்மையில் மனங் கவல்கிறேன். ஆனால், மகாத்மாவும் பண்டிதர் நேருவும் இன்றும் ஜீவந்தராயிருந்து அந்தச் சுதந்திரத்தைக் காணக் கொடுத்துவைத்தனமபற்றி நாம் ஆறுதலடைகிறோம்."

"இன்று பாரதநாடு சோல்லொணாத் துன்பத்தில் ஆழ்ந்திருக்கிறது. வகுப்புக் கலவரத்தினால் நாடு படாதபாடுபடுகிறது ஆனால் உலகம் போற்றும் உத்தமன், அகிம்சா முனிவன், எங்கள் ஐயன், அத் துன்பக் கனலைப்பேநக்க எம்முடன் இருந்தே தொண்டாற்றி வருகிறார்.

"இன்று இந்தியா துண்டாடப்பட்டுவிட்டது என்பது உண்மைதான். அதன் பயனாக விளைந்த துன்பங்கள் இன்னும் ஒழியவில்லை என்பதும் உண்மைதான். ஆனால் இத்துன்பங்கள் யாவும் இன்னும் சிலகாலத்தில்மாய்ந்துவிட, எங்கள்பாரத நாடு—எங்கள் பாரததேவி, தன் முந்திய பொலிவுடன் தலைநிமிர்ந்து,உலகிலே சமாதானத்தை, சாந்தத்தை, தர்மத்தை, சத்தியத்தை நிலைநாட்ட முன்வருவாள் என்பதே எனது பூரணமான நம்பிக்கை. இன்று உலகம் தட்டுக்கெட்டுத் தடுமாறிநிற்கிறது. அதனைச் சீர்படுத்தவேண்டுமானால் இந்தியாதான் முன்வரவேண்டும்.

"இன்று உலகிலே ஐக்கியநாடுகள் ஸ்தாபனம் என்று ஒன்று இருக்கிறது. டலவளம்பரத்துடன், ஏக ஆடம்பரத்துடன் இது அங்குரார்ப்பணம்செய்யப்பட்டது. இந்த ஸதாபனம் உலகிலே எவ்வளவோ கருமங்களையெல்லாம் சாதிக்கப்போகிறதென்றெல்லாம் பறைசாற்றினார்கள். ஆனால் இன்று நடப்பதென்ன? அங்கே சதா தர்க்கமும், அதிகப்பிரசங்கங்களும்தான்! இந்த விவாதங்களும் பிரசங்கங்களும், ஒரு முடிவையும் இன்னும் அளிக்கவில்லை. பழைய சர்வதேச சங்கத்தின் கதியை இந்த ஐ. தே. ஸ்தாபனமும் அடையாதிருக்கவேண்டுமானால் அதில்கீழ்த் தேசமக்கள் ஜீவத்துவத்துடன் பங்குபெற்று அதன் கருமங்களில் கூடிய சிரத்தை எடுக்கவேண்டும். உலக சமாதானத்தை நிலைநாட்டுவதில் மேனாடுகள் தவறிவிட்டன. இனி கீழைத் தேசங்களே அந்தப் பொறுப்பைத் தாங்கவேண்டும். ஐ.தே. ஸ்தாபனத்தில் கீழைத் தேயங்கள் வலுக்கொண்டு உலக சமாதானத்தை நிலைநாட்டத் தோளோடு தோள் சேர்ந்து உழைக்கவேண்டும். இந்தியா, இலங்கை, இந்தனேஷியா பர்மா, சீனம், ஜப்பான், வியற்நாம், மலேயா முதலாம் நாடுகள் பூரண சுதந்திரம் பெற்று ஆசிய மக்களுக்கு மாத்திரமல்ல, உலக மக்கள் அனைவருக்குமே சுதந்திரம்பெற்றுக்கொடுக்க முனையவேண்டும்.

"இந்த இலங்கையிலே பலவிதமான அரசியற் கொள்கையாளர் உளர். எந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தாலும் சரி, நீதி, நியாயம், சத்தியம், நேர்மை அகிம்சை, அன்பு என்பவற்றையே ஒவ்வொருவரும் கைக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். ஓர் நாட்டை மற்றவர்கள் எதனைக்கொண்டு கணிப்பர்? அங்குள்ள மாடமாளிகை கூடகோபுரங்களைக் கொண்டல்ல! அல்லது அதன் நீர்வளம் நிலவளத்தைக் கொண்டல்ல! அல்லது அதன்விவசாயம் கைத்தொழில்களைக் கொண்டல்ல! அங்குள்ள மக்களின் ஒழுக்கத்தைக் கொண்டே அந்நாட்டை அந்நியர் கௌரவிப்பர். ஆகவேநீங்களனைவரும் ஒழுக்கசீலராக வாழவேண்டும்; சத்தியவந்தராகத் திகழவேண்டும்; அகிம்சாநெறியாளராக இருத்தல்வேண்டும்.

"இங்கே இலங்கை-இந்தியப் பிரச்சினை பலகாலமாக எல்லார் மனத்தையும் ஈர்த்துப் பல இராஜதந்திரிகளுக்குத் தலைவலியைக் கொடுத்துவிட்டது எனலாம். இலங்கை—இந்தியா என்னும் இரு நாடுகளுக்கும் பரஸ்பரம் திருப்தி விளைக்கத்தக்க முறையில் இப்பிரச்சினை இனியும் தீராமல் இருக்கமுடியாது. எப்பகுதியும் இனி அட்சேபிக்காமல், சமரசமாக இப்பிரச்சினையைத் தீர்க்கவேண்டுமென்னும் தீர்மானத்துடனேயே நான் இங்கு வந்திருக்கிறேன் இலங்கைஇந்தியா என்னும் இரு நாடுகளையும் ஓர் சிறிய வாய்க்காலே பிரித்து வைத்திருக்கிறது. இரண்டு நாடுகளிலும் வேறுவேறுனஅரசாங்கங்கள் இருந்தபோதிலும், தொன்றுதொட்டு இருதேசங்களுக்குமிடையேஇருந்தபலவிதமானதொடர்புகளையும் நேசத்தையும்அறுக்க எவராலும்முடியாது. இந்தியாவும் இலங்கையும் ஒன்றுதான். ஆகவே,இன்னும் சிலமாதங்களில் இருநாட்டு மக்களும் தங்கள் உண்மை நிலையை உணர்ந்து, தங்களுக்கிடையேயுள்ள இந்தச் சிறியபிரச்சினையைச் சமரசமாகத் தீர்த்துக்கொள்ளுவர் என்று பூரணமாக நம்புகிறேன். இவ்விஷயத்தில் நாம் அதைரியப்பட எவ்வித காரணமும் இல்லை என்பதை உறுதியாகக் கூறுகிறேன்.

"வருகிற டிசெம்பர் மாதத்தில் நான் இவ்விஷயமாக இந்தியாசென்று பிரதமர் நேருவைக் காண்பேன். அப்போது இந்தப் பிரச்சினை சமரசமாகத் தீர்க்கப்படும் என்று காத்திருக்கிறேன்."

இலங்கையிலே பொதுமக்களுக்கும் அரசாங்கத்துக்கும் உள்ள தொடர்புபற்றி ஸ்ரீஜவுத் கிரி பின்வருமாறு கூறினார்

"இலங்கை நாட்டின் முதுகெலும்பு போன்ற சாதாரண மக்களின வாழ்க்கை நிலையை உயர்த்த இலங்கை அரசியல்வாதிகளும், அதிகார பதவிகளில் உள்ளவர்களும் சிரத்தைகொள்ளுவர் என்று நம்புகிறேன். இங்குள்ள ஒவ்வொரு மனிதனும் தனது மூலாதார உரிமைகளைப் பெற வேண்டும், இங்கே இடதுசாரிகள் அதிகாரம் வகித்தாலென்? வலதுசாரிகள் அரசியலைக் கைப்பற்றினாலென்? அல்லது இடைநடுக் கொள்கையாளர் பதவிகளைக் கைப்பற்றினாலென்? பொதுஜனங்கள் சுகசீவிகளாக வாழ்ந்து நேரக் கஞ்சியை மனரம்மியமாகக் குடித்து, உடுக்கும் நான்கு முழத்தைக் கௌரவமாக அணிந்துகொள்ளாவிட்டால் வலதுசாரிகளால் அல்லது இடதுசாரிகளினால் என்னபயன் என்று கேட்கிறேன்! சாதாரண மனிதனும் அவன் குடும்பமும் மனரம்மியமாக வாழ்க்கையை நடாத்தவேண்டும். அவனுடைய வாழ்வில் தாழ்வில் அரசாங்கம் உதவி செய்யவேண்டும் அவனுக்காக அரசாங்கம் இருக்க வேண்டுமே யன்றி அரசாங்கத்துக்கு வரி இறுப்பதற்கு மாத்திரம் அவன் உயிர்வாழும்முறை இருக்கவொண்ணாது. எனவே நாட்டின் பரிபாலனத்தை மேற்கொள்ளுவோர் இந்த உண்மையை மறந்து கொள்ளாமல், மக்களின் சேமவாழ்க்கையிற் கவனம் செலுத்துதல் வேண்டும். இல்லையேல் இந்த அரசியல் வாதிகளுக்கும் இராஜ தந்திரிகளுக்கும் ஆபத்துத்தான் என்பதை எச்சரிக்கை செய்ய விரும்புகிறேன். பொதுமக்கள் வாழ்க்கையைத் திருத்த அரசாங்கமும் அரசியல் வாதிகளும், தலைவர்களென முற்படுவோரும் முன்வாராவிட்டால், பொதுமக்கள் அதிகாரத்தைத் தாமே கைப்பற்ற முயற்சிக்கலாம். அதன் பயனாக அராஜகமும் குழப்பமும் கொந்தழிப்பும் ஏற்பட்டு, அல்லோலகல்லோல நிலையை அடையக்கூடும்.

"இன்று இந்திராவிலே சில சிற்றரசர்கள் தங்கள் பழைய சர்வாதிகாரக் கொள்கையை இன்று நிலைநிறுத்தப் பகீரதப்பிரயத்தனம் செய்கிறார்கள்; ஆனால் பொதுஜனங்களின் உத்வேகத்துக்கு முன்னர் இந்தச் சர்வாதிகாரம் ஓர்போதும் தலையெடுக்கமாட்டாது என்பது நிச்சயம்."

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார நிருவாகசபையில் அங்கத்தவராயுள்ள ஸ்ரீ அ. அருளம்பலம் (நியாயதுரந்தரர் நன்றியுரை கூற விழா இனிதே முடிந்தது.

பலஸ்தீனக் குழப்பம்

வரவர முற்றுகிறது

பலஸ்தீனக் குழப்பம் வரவர முற்றிக்கொண்டே போகிறது. யூதரும் அராபியரும் தமக்குள்ளே ஓர் சமாதானத்திற்கு வராவிட்டால், தாம் பலஸ்தீனத்தைவிட்டு வெளியேறுவது என்பதில் பிரிட்டிஷார் மிகவும் உறுதியாயிருக்கிறார்கள்.

பிரிட்டிஷார் வெளியேறியவுடன் அராபியர்க்கும் யூதருக்குமிடையே ஓர் பெரிய போராட்டம் ஆரம்பமாகலாம். அப்போது அராபியர்க்குச் சகலவிதமான உதவிகளையும் செய்ய எகிப்து, சிரியா, லெபனான் படைகள் பலஸ்தீன எல்லைப் புறத்தில் ஆயத்தமாக நிற்கின்றன என்று ஓர் செய்தி கூறுகிறது.

பலஸ்தீனத்தைத் தமக்காக்குவதற்கு அராபியர் பலாத்கார முறையில் ஆக்கிரமித்தால் தாமும் எதிர்நடைவடிக்கைஎடுக்க ஆயத்தம் என்று யூதர் பட்டவர்த்தனமாகத் தெரிவித்துவிட்டனர்.

"நான்" என்பது மடிய

மகிஷாசுர வதத்தின் அர்த்தம்

நவராத்திரி உற்சவமும் தமிழர்தம் நாகரிகமும்

(கொழும்பு, ச. இராமச்சந்திரன்)

சென்ற செவ்வாய்க்கிழமை வெளிவந்த இந்துசாதனத்தில் விளக்கியுள்ளபடி புரட்டாதிமாசம் 29ந் தேதி புதன் கிழமையன்றே இலங்கைவாழ் இந்துக்களெல்லாம் நவராத்திரிப் பூசையை ஆரம்பிப்பார்களென நம்புகிறோம். இப்பண்டிகையானது சாக்தர், சைவர், வைஷ்ணவர், முருக, ராம, கிருஷ்ண அடியார் எல்லார்க்கும் பொதுவான மிக்கவும் முக்கியமான வழிபாட்டுக்காலம். இதில் தினவித்தியாசம் ஏற்படுவது இழுக்காகும்.

சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள் அவர்கள் கூறியிருப்பது முழுதுஞ்சரி. இரகுநாதையர் பஞ்சாங்கத்திலேயே ஆயவீஜ சுத்தம் புதன்கிழமைக்கே குறிக்கப்பட்டுள்ளது. அதுவுமன்றி, ஏதே பஞ்சாங்கம் ஐப்பசிமாசம் ஆறுந் தேதி வியாழக்கிழமையை மஹாநவமியாகச் சரியாகக்கணித்தும் உள்ளது. புதன்கிழமை ஆரம்பிக்காமல் செவ்வாய்க்கிழமை (28ந் திகதி ஆரம்பித்தால் நவராத்திரி தசராத்திரியாகவும் விஜயதசமி 11ம் நாளாகவுமல்லவோ முடியும்?

நவராத்திரி விளக்கிநிற்பது நவகுணங்களின் பரிணமப்படியையேயாம். பிரதமையன்று [illegible] ஆனாலும் [illegible] நவமியில் [illegible] வடைகிறது.

பாஇச்சை; பரக்கிரியை, பரஞானம் மூன்றையும் தில்வியாம்சங்களாகக்கொண்டுள்ள மஹாகாளி, மஹாலக்ஷ்மி, மஹாசரஸ்வதி மூவரும் முறையே சுத்ததாமசம், சுத்தராசதம், சுத்தசத்துவம் ஆகிய முக்குணங்களை விளக்குகின்றன. இவற்றிற்குக் குறிக்கப்பட்ட திதிகள் திருதியை, சஷ்டி, நவமியாகும். எனவே. நவராத்திரியின் முதல் மூன்று தினங்கள் காளி வணக்கத்திற்கும். இரண்டாவதான மூன்று தினங்கள் லக்ஷ்மி வழிபாட்டிற்கும் இறுதி மூன்று நாட்கள் சரஸ்வதி பூஜைக்கும் பிரிக்கப்பட்டுள்ளன. சரஸ்வதிக்கு ஸப்தமி தொடக்கம் நவமிவரைக்கும் சரியாகக் காலங்கணித்த பஞ்சாங்கத்தார் காளிக்கும் லக்ஷ்மிக்கும் இம்முறை ஆளுக்கு மூன்றரை நாள் கொடுத்ததானது வியப்பைத் தருகின்றது.

நிற்க, இருக்குவேத காலந்தொட்டே வழக்கிலுள்ள இச்சக்திவழிபாட்டின்முறையும் வழிபடு காலமும், யுகத்துக்கு யுகம், இடத்துக்கு இடம் வித்தியாசமாகவே இருந்துவந்துள்ளன. உதாரணமாக இத்தேவி பூஜையை இராமர் ஸரத்காலத்திலும், இராவணன் வசந்தகாலத்திலும், [illegible] மனிக் காலத்திலும் [illegible] டியதாகப் பல நூல்கள் கூறுகின்றன. இந்த வழிபாடுகளுட் சில இன்றும் இந்தியாவில் பல இடங்களில் உள. அஸ்வினி மாசம் சுக்லபக்ஷ பிரதமைமுதல் ஒன்பது நாட்களையும் துர்க்கை வழிபாட்டிற்கே வங்காளத்தில் கொண்டாடுகின்றனர். மஹிஷாசுர சங்காரம் இத்துர்க்கை அவதாரத் தொடர்ச்சியில் ஏற்பட்டதேயாம். இதில் அடங்கியுள்ள அரிய தத்துவத்தை பலர் இன்று அறிவதில்லை. அதையும் சற்று விளக்குவோம்.

புராணக் கதைப்படி மஹிஷாசுரன் சிவனதின் அம்சத்தோடு அவதரித்த ஓர் அசுரன். அவன் மிகவும்பராக்கிரமசாலியாயிருந்தபடியால், தேவி தனது முதல் அவதாரத்தில் அவனைக் கொல்லமுடியவில்லை. இரண்டாம் அவதாரத்தில் அவனை வென்றபோதிலும் அவனை முற்றாகக் கொன்றது மூன்றாவது அவதாரத்திலேயாம். இந்த மூன்றாவது அவதாரமே துர்க்கை. அவள் உருவம் பூரணமானது. சப்தமித் திதியில்; தேவர்கள் ஆயுதங்கள் ஆபரணங்கள் சூடிப் போற்றியது அஷ்டமியில்; மஹிஷாசுரன் வதை நடந்தது நவமியில் இந்த மூன்று திதிகளும் சரஸ்வதி பூஜைக்கு நம்நாட்டில் பிரித்து விடப்பட்டிருப்பதை முன்னரேயே விளக்கியுள்ளோம். மஹிஷாசுரன் நம்முள் உள்ள 'நான்' என்ற மூனைப்பைக் குறித்து நிற்கின்றது. அதனை

தொடர்ச்சி 4 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியம்மானை

— : இறைமணி : —

[22-8-47 ல் வெளிவந்த பாடல்களின் தொடர்பாக இன்னுஞ் சில பாடல்களைக் கீழே தருகின்றேன். ஈண்டுக் குறிப்பிடப்படுவன கடவுள் வாழ்த்தும் அவை மடக்கமுமே என்பது உய்த் துணரத்தக்கது. மட்டக்களப்புப் பிரிவிலே யுள்ள பலர் இவற்றை நெட்டுருச்செய்து பாடும் வன்மையடையர்]

வேதம் விளங்க
விமலர்கள் போற்றிசெய்ய
பாதம் பிடித்தேன்
பரமகுரு வாழ்க
எந்தன்குரு வாழ்க
ஈன்றெடுத்த தாய்வாழ்க
தந்தைகிளை வாழ்க
சார்ந்தோர் மிகவாழ்க
நன்மொழியின் தன்மை
நானித்தனை யென்றறியேன்
முன்பு பெரியோர்
மொழிந்த மொழியறியேன்
அஞ்சலென்று வந்து
அடியேனை யாளாக்கி
தஞ்ச மெனைக்காத்து
தயவுதரச் சண்முகனே!
எந்தவிதமுமெனக்
கெழுத்தை யறிவித்துனது
சந்தாஞ் சேர்ந்த
சுடரோனே புன்பாதம்
என்தலைமேற் கொண்டே
ஸரிவியொருநாளு மறவேன்
வாரணன்ன நாடன்
வணிகேசர் நற்பதியில்
வேறுக வந்துதித்த
பிரதாப துங்கமுகில்
காரான கற்பகத்தோன்
கந்தனருள் பெற்றமுகில்
வாரேறு கும்பமுலை
வள்ளியம்மன் பொற்பாதம்
ஆராய்ந்து பாடுகிறேன்
அரிய தமிழ் தான் தெரிந்து
வடிவேலர் வள்ளிதனை
வதுவை முகித்ததகை
அடியே னுரைப்பதுதா
னம்புவியி லென்னுளும்
ஆதவனுக்கு நிகரா
யம்புவியினிற் சிறிய
கீதமுன்ன மின்மினியும்
கிளர்ந்தசைவ தென்பதொக்கும்
வானமதிலே யெழுந்த
மதிக்கு நிகராக
தானமுடன் நட்சத்திரம்
தான்கிளர்ந்ததே யொக்கும்
கானமிலுக் கிணையாய்க்
கண்டிருந்த வான்கோழி
தானுஞ் சிறகை விரித்
தாடினது போலாகும்.
ஐந்து தலை நாக
மதற்குச் சரியாக
வந்து சிறு மண்ணுண்ணி
வாய்த்தகையென்பதொக்கும்
அத்தகைமைக் கொக்கு
மடியேனுரைத்த தமிழ்
குற்றமொன்றும் வாராமற்
குறை தீர்ப்பாய் கற்பகமே
இந்தக் கதை பாட
எந்நாளு மென்நாவில்
வந்துதவ வேணுமினி
வால சரஸ்வதியே
சிற்றெறமபு கூடச்
சிறந்த சமுத்திரத்தை
வற்றக் குடிப்பமென்ற
வாறொக்கு மம்மானை
இலங்கை யிராவணனை
யீடளித்த மாருதிக்குத்
துலங்குகிரி வானரங்கள்
சொன்னபடியென்பதொக்கும்
விசைக்கடங்காப் பரிக்கு
மேலான பூவுலகில்
இசைப்புரவி தாண்டிக்
குதிப்பேனு னென்பதொத்தும்
பிட்சி சிறுவாட்சி சிறு
செண்பகத்துக்கு நிகராய்
நீச்சையுட னெருக்கு
மியல்பாகப் பூத்ததொக்கும்
பத்தரைமாற்று பசும்
பொன்னும் நின்றிலங்கப்
பித்தளையுங் கூட நின்று
பின்னிக் கிடக்கலையோ
அந்த மின்னுக் கொக்குமிது
அடியேனென் நாவகத்தே
வந்துதவ வேணுமினி
வால சரஸ்வதியே.

நூல்வரலாறு.

அந்தநாளிற் தேவர்களும்
ஐராவத்தோனும்
மின்னு மூவுலகில்
வேந்தர்களும் பார்த்திருந்து
அரக்கருபத்திரவும் அமரர்
பொறுக்காற்றார்
இருக்க மிகவுடைய
வியல் மாயன்தன்னிடத்தில்
பச்சைமுகில் நாரணனைப்
பண்டொரு நாளண்டர்களும்
மெச்சி மலர் தூவி
மிகத் தொழுதாரம்மானை
மெய்யாகத் தேவர்
விரைந்து அடி தொழுதார்
அய்பன் முகுந்தன்
அடிதொழுதாரப்பொழுது
அந்நேரம் மாயனமரர்
தன்னையஞ்சலென்று
பொன்னான பூவுலகில்
பொருதுமாக்கருடன்
வையகமுந் தேவர்
வந்துபடை செய்திடவே
துய்யதிருச் சங்கைத்
தொனித்தனர் காணம்மானை.

... ...
... ...

என்று தொடர்கின்றது நூல். இவ்வரிய தமிழ்ப் பொக்கிஷம் அழிந்தொழிந்து சிதைந்துவிடாது அச்சிட்டுப் பாதுகாத்தல் ஒவ்வொரு தமிழ் மகனையும் சேர்ந்த கடமையன்றோ.

திருச்சி ரேடியோ

செவ்வாய் அக்டோபர் 14

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 தமிழில் செய்திகள் 7-45 தஞ்சாவூர் கே பி சிவானந்தம் வீணை 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 அரியக்குடி ராமானுஜஐயங்கார் இசைத்தட்டு 8-30 டி கே பக்கிரிசாமிபிள்ளை புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் 1.30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 டி கே பக்கிரிசாமி பிள்ளை புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2.05 டி கே பக்கிரிசாமிபிள்ளை புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு.

மாலை 5 திருவாரூர் பி ஆர் திலகம் பாட்டு 5.40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்ரகானம் இசைத்தட்டு 7-15 தாளவாத்தியக்கச்சேரி 7-30 தமிழில் செய்திகள் 7-45 தஞ்சாவூர் கே பி சிவானந்தம் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 சித்தூர் சுப்பிரமணிய பிள்ளை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9.40 அறிவிப்புகள் 9-45 கே ஜே ஜோஸ் தில்ரூபா 10 நீங்கள்கேட்டவை இசைத்தட்டு 10-30 முடிவு.

புதன் அக்டோபர் 15

காலை 7.15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம் எஸ் முகம்மது ஹுஸேன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை இசைத்தட்டு 8-30 ஜி எஸ் ரகுவீரன் வயலின் 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 எம் எஸ் முகம்மது ஹுஸேன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2 05 எம் எஸ் முகம்மது ஹுஸேன் பாட்டு 2-15 கல்வி ஒலிபரப்பு 2-45 முடிவு

மாலை 5 கெ கோமதி அம்மாள் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சந்திப்பு 7-30 தமிழில்செய்திகள் 7.45 கே கோமதி அம்மாள் பாட்டு 8-30 ஜி எஸ் ரகுவீரன வயலின் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 ஆங்கிலப்பேச்சு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 ஐரோப்பிய சங்கீதம் இசைத்தட்டு 10-30 முடிவு.

வியாழன் அக்டோபர் 16

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 ஆர். நாராயணசாமி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8¼ காலை இசை இசைத்தட்டு 8 - 30 டி. பாலம்மாள் வீணை 9 ஒலிபரப்பு முடிவு

1 கதம்பம் இசைத்தட்டு 1 30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 பெண்ணுலகம் 2 தமிழில் செய்திகள் 2-05 குரல் வகை இசைத்தட்டு 2 - 15 கல்வி ஒலிபரப்பு 2-45 ஒலிபரப்பு முடிவு

மாலை 5 டி. பாலம்மாள் வீணை 5 40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 சுலோசனா பட்டாபிராமன் பாட்டு 7-15 மொழிவாரி மாநாணங்கள் பேச்சு 7-30 தமிழில் செய்திகள் 7-45 சுலோசனா பட்டாபிராமன் பாட்டு 8-15 மதராவில் உள்ளபடியே 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல் வகை இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை (ஆங்கிலம்) 9-45 ஆர். நாராயணசாமி பாட்டு 10 - 30 ஒலிபரப்பு முடிவு.

வெள்ளி அக்டோபர் 17

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 சே பத்மநாதன் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 திருச்சி வாத்யகோஷ்டி 8-30 கே. ஜி. சிவன் பாட்டு 9 ஒலிபரப்பு முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 கே. பத்மநாபன் பாட்டு 2 தமிழில் செய்திகள் 2-05 கே ஜி. சிவன் பாட்டு 2 - 15 கல்வி ஒலிபரப்பு 2 - 45 ஒலிபரப்பு முடிவு.

மாலை 5 00 வி. சுந்தரசாரதாம்பாள் பாட்டு 5-40 குரான் - ஷரீப் விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 வி. சுந்தரசாரதாம்பாள் பாட்டு 7-30 தமிழில் செய்திகள் 7-45 கலப்பு அலங்காரத்தில் வி. ஆர். சாரதா—பேச்சு 8 [illegible] சயப்பா பிள்ளை நாதஸ்வரம் கும்பகோணம். தங்கவேலு பிள்ளை தவில் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 நாட்டுப்பாடல்கள் 9 - 30 லண்டனிலிருந்து செய்திகள் 9 - 40 அறிவிப்புகள் : வானிலை (ஆங்கிலம்) 9¾ குரல் வகை இசைத்தட்டு 10 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 10-30 ஒலிபரப்பு முடிவு.

காணிவிற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கந்தர்மடம் வாசிகளான பராயமற்ற

(1) மார்க்கண்டு மகள் இராஜேஸ்வரி, (2] மார்க்கண்டு முத்துக்குமாரசாமி, (3) மார்க்கண்டு சிவஞானம், (4) மார்க்கண்டு நடராசா இவர்களின் பராபரிப்புத் தத்துவ விண்ணப்பத்தில்.

பராபரிப்புத் தத்துவ வழக்கு
இல: 283.

இவ்வழக்கில் கோட்டாரின் கட்டளைப்படி இவ்விளம்பரத்தில் பின் நன்கு விபரிக்கப்படு மாதனத்தை விற்க விருப்பதால் இக்காணியை வாங்க விரும்புவோர் இன்று தொடக்கம் 21 நாட்களுக்குள் தங்கள் விலையைக் குறித்து விண்ணப்பங்களை எனக்கு அலலது யாழ்ப்பாணம் பெரிய கோட்டுச் சக்கிடுத்தாருக்கு அனுப்பிவைக்கும்படி வேண்டப்படுகிறது.

ஆதன இடாப்பு:

காரைதீவுப் பகுதி வலந்தலையிறை "மாப்பாணனூரி" நிலைப்பரப்பு 5 ஆனல் உலாந்தா அளவின்படி நிலைப்பரப்பு 5ம் குளி 4⅛ம் எல்லைகள் கிழக்கு கந்தையா பெண் தெய்வானைக் குரிய வாதனம்; வடக்கும் மேற்கும் ஒழுங்கை; தெற்கு இளையதம்பிபெண் பாறுவதிக் குரியவாதனம். இவ்வெல்லைக் குட்பட்ட பனைகள் வடலிகள் தென்னைகள் வேம்புகள் அடங்கலில் சொரியலாய் அரைவாசி.

இங்ஙனம்,
ச. க. கதிரவேலு,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.
பராபரிப்புத் தத்துவகாரியின் பிரக்கிராசியார்.

Mis. 155, 14—10 - 47

பரீட்சைகளுக்கு முத்திரைப் பணம்

1948-ம் ஆண்டு ஜனவரி மாதத்திலும் அதற்குப் பின்னரும் ஆரம்பமாக வேண்டிய பரீட்சைகளின் விஷயத்தில், குறித்த பரீட்சைப் பிரமாணங்களிலுள்ள நிபந்தனைகளைத் திருப்திபண்ணுததால் தவிர்க்கப்படும் விண்ணப்பங்களை அனுப்பிய பரீட்சார்த்திகள் கொடுக்கும் கட்டணப் பணத்தின் எப்பங்கும் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது.

கொழும்பு, 26—9—47
இயன் சான்டிமன்
வித்தியாதிபதி
G 108 14-10-47

பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேகபுஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருமுத்தல் விலை ரூபா 25
அரைமுத்தலுக்கு ரூபா 12-50
கால்முத்தல் ரூபா 6-25

விலாசம்:

க. ஆறுமுகம்பிள்ளை
நி. 156, செக்கடித்தெரு கொழும்பு
Std. 1. 26—3—47 to 1—4—48

வியாபாரத்திற் கழகு விளம்பரஞ் செய்தல்

"நான்" என்பது மடிய

3-ம் பக்கத் தொடர்ச்சி

'தான்' என்னும் அருட்சக்திக்கு ஊனுக்கிணுலன்றி விடுதலை கிடையாது. முதலில் அதை பரஇச்சையும் பரகிரியையும் தாக்குகின்றன. 'நான்' என்ற அகங்காரம் நசியவில்லை. இறுதியில் பரஞானமே அதனை வெட்டிச் சாய்க்கின்றது. இதுவே, நவராத்திரி விழாவில் ஆதிபராசக்தியை காளியாகவும், லக்ஷ்மியாகவும், சரஸ்வதியாகவும் வழிபடுவதின் உட்கருத்தாகும். ஆதி மக்களாம் தமிழர் இதே தத்துவ நுட்பத்தை தங்கள் முருகன் வழிபாட்டில் வள்ளி (இச்சாசக்தி) தெய்வானை (கிரியாசக்தி) வேல் (ஞானசக்தி) என அழகுபெற அமைத்திருப்பதானது அவர்களின் நாகரிகம் ஓர்காலத்தில் அடைந்திருந்த உச்சநிலையை விளக்குகின்றது.

வெள்ளச் சேதம்

சென்ற ஆண்டு மாதத்திலே தென் இலங்கையில் நிகழ்ந்த வெள்ளப் பெருக்கால் 8000 வீடுகள் நாசமாயின. 2500 வீடுகள் சேதமுற்றன. 222 பேர் உயிர் துறந்தனர். 27,000 ஏக்கர் நிலத்துப் பயிர்கள் அழிந்தன. இதுவரை அரசாங்கம் மாத்திரம் 5 லட்சத்து மூவாயிரம் ரூபா வெள்ள நிவாரணத்தின் பொருட்டுச் செலவழித்துள்ளது.

விலகிவிடு!

டக்ளர் கொல்வின் ஆர். டி. சில்வாமீது சிங்களர் கோபம்

போல்ஷேவிக் லெனின்கட்சித் தலைவரான டக்ளர் கொல்வின் ஆர். டி. சில்வா இந்தியத் தொழிலாளரைக் கட்டுப்பாடு இன்றி இலங்கையில் வரவிடவேண்டுமென்ற கொள்கை யுடையவர். அவர் கொழும்பு வெள்ளவத்தை கற்கிசைத் தொகுதியில் அடைந்துள்ள வெற்றி, அவர் கொண்டுள்ள கொள்கையின் வெற்றியா என்று அங்குள்ள வாக்காளர் கேட்கிறார்களாம்.

இந்தியத் தொழிலாளர் விஷயமாக டக்ளர் கொல்வின் ஆர். டி. சில்வா கொண்டுள்ள கொள்கை பிழையானதென்றும், அதைக்கொள்கைக்காக அவரைத் தெரியவில்லை யென்றும், அப்படியான கொள்கையை அவர் கடைப்பிடிப்பதானுல், அவர் தம் பதவியைவிட்டு விலகி மீண்டும் தேர்தலில் முற்படவேண்டுமென்றும் இவர்கள் கேட்கிறார்களாம்.

இத்தொகுதியில்உள்ள சிங்களர் பலர் டக்ளர் கொல்வின் ஆர். டி. சில்வாவின் இந்தியக்கொள்கையை [illegible] காரணத்தில் குப்போடு [illegible] விட்டனராம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரி-சௌனுயக்கா செய்தி

சமரச மனப்பான்மை பொலிகிறது

"இலங்கையில் இந்திய அரசாங்கத்தின் பிரதிநிதியாயுள்ள ஸ்ரீஜுத். வி. வி. கிரி, மிஸ்டர் சௌனுயக்கா பிரதம மந்திரியாகிப் பதவியேற்றதைப் பாராட்டி இந்திய அரசாங்கத்தின் சார்பாக ஓர் செய்தியனுப்பி யிருக்கிறார். அதில் இலங்கை இந்தியப் பிரச்சினையையும் அவர் குறிப்பிடுகிறார்: அவர் கூறுவதாவது:

"இலங்கை, இந்தியா என்னும் இரு நாடுகளுக்கு மிடையே அபிப்பிராய பேதத்துக் கேதுவாய இலங்கைவாழ் இந்தியர் பிரஜா உரிமைபோன்ற பிரச்சினைகளை, இருதேசத் தலைவர்களும் சமாதானம் வேண்டி மனப்பூர்வாக ஆலோசிப்பரேயானுல், அப்பிரசனைகள் மிகவும சுலபத்தில் தீர்ந்துவிடும் என்றே நான் ஆங்குவந்த நாள் தொடக்கம் எண்ணி வருகிறேன்.

"இலங்கை இந்தியா என்னும் இரு தேசங்களும் மூன்றும் பேர்வழியின் தலையீடின்றி, தாமே இப்பிரச்சினையைப் பேசி முடிவுக்கு வரக்கூடிய ஓர் அந்தஸ்தை அடைந்துள்ளன. ஆகவே, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் இனித் தாங்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தி, அதன் பலனுக, அதிர்ப்தியுடன் இருப்பவர்களுக்குப் பதிலாக பூரண விசுவாசமும் திருப்தியும் கொண்டுள்ள இலங்கைவாழ் இந்திய மக்களை இந் நாட்டுப் பிரசைகளாகக் கொண்டு, இந்தியாவின் நட்பைப் பெற்று இருநாடுகளும் ஒரே லட்சியத்தையடைய உதவிபுரிவீர்கள் என எதிர்பார்க்கிறேன்.

"தங்களது அரசாங்கத்தை எதிர்நோக்கி இனித்தான் பல பிரச்சினைகள் இருக்கின்றன. வறுமை, அறியாமை, நோய், துன்பம் என்னும் இவற்றுக்கு எதிரான தங்கள் போராட்டம் இனித்தான் ஆரம்பமாக இருக்கின்றன. இந்தப் போராட்டத்தில் என்னுடைய அரசாங்கின் உதவியும் ஒத்துழைப்பும் தங்களுக்குச் சம்பூரணமாகக் கிடைக்கும் எனபதைத் தெரிவிக்க விரும்புகிறேன்"

மேலே காட்டிய செய்திக்குப் பிரதமர் மிஸ்டர். சௌனுயக்கா கீழ்க்கண்டவாறு பதில் அனுப்பியுள்ளார்:

"சுதந்திர இலங்கையும் சுதந்திர இந்தியாவும் உலகிற் சிறந்த அயலவராயும் கூட்டாளிகளாயு மிருக்கும் என்பதற்கு ஐயமே இல்லை. இருதேச மக்களதும் பல தொடர்புகளை எண்ணுங்கால் வேறு எப்படி யிருக்க முடியும்? இந்தியத் தலைவர்களுடன், இருநாடுகளின் தொடர்பு பற்றிய பேச்சு வார்த்தைகளைக் கூடிய சீக்கிரத்தில் ஆரம்பிக்க நான் எண்ணி யிருக்கிறேன். இந்தச் சம்பாஷணை இந்த ஆண்டு முடிவில் நடக்கும் என எதிர்பார்க்கிறேன்.

"இந்தியாவும் இலங்கையும் இப்போது தம் கருமங்களைத் தாமே பார்க்கும் அந்தஸ்தை அடைந்துள்ளன. எனவே, இருநாடுகளுக்கு மிடையே யுள்ள பிரச்னைகள மிகவும் சுலபமாகக் கூடிய சீக்கிரத்தில் தீர்க்கப்பட்டுவிடும் என நாம் உறுதியாக நம்புகிறேன்"

உ

சிவமயம்

காரைநகர் வியாவிற் சைவபரிபாலன வித்தியாலய

நவராத்திரி தின

நிகழ்ச்சிகள்

புரட்டாதி மீ உகூ உ (15 10-47) புதன்கிறமை ஆரம்பம்

பிரதிதினங்களும் இரவு ஆறரை மணியளவில் ஆராதனை

ஐப்பசி மாதம் அ உ (24-10-47) வெள்ளிக்கிழமை பகல் 11 மணியளவில் சரவதி பூசை, வித்தியாரம்பம்; பிற்பகல் 3 மணியளவில், சைவ, தமிழ் ஞானம் பெருக்குதற்குத் தமிழ்க் கல்லூரி நிறுவப் பரிபாலனசபை அமைப்பதற்கு பெற்றார், ஆசிரியர், பழைய மாணவர், நன்கொடையாளர், கல்வி விருத்தியாளர் முதலிய அன்பர்களது

மகாசபைக் கூட்டம்.

அன்பர்கள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்

கு. இராமசுவாமி	காரைநகர்	இ. நாகலிங்கம்
தலைமை ஆசிரியர்	12-10-47	மனேஜர்.

M 156 14-10-47

எம்பணம் போகும் போக்கு!

மந்திரிகளுக்கு 2000 ரூபா!
பிரதிநிதிகட்கு 700 ரூபா!

புதிய பாராளுமன்றத்துப் பிரதிநிதிகளுக்கு மாதம் 700 ரூபா சம்பளம் கொடுக்கவேண்டுமென றுசென்ற செவ்வாய்க்கிழமை முதன் முதலாகக் கூடிய மிஸ்டர் சௌனுயக்காவின் மந்திரசபை தீர்மானித்திருப்பதாகத் தெரிகிறது. முந்திய அரசாங்கசபையில் அங்கத்தவர்களுக்கு 500 ரூபாவும், மந்திரிகளுக்குத் தனித் தனி 1500 ரூபாவுமே வேதனமாகக் கொடுக்கப்பட்டு வந்தது. ஆனுல் புதியபாராளுமன்றத்தில் பிரதம மந்திரிக்கு 1500 ரூபாவேதனமும் உபசரணைப்பணமென 1500 ரூபாவும், எல்லாமாக 3000 ரூபா அளிக்கப்படுமாம்.

மற்றும் மந்திரிகளுக்குத் தனித் தனி வேதனம 1500 ரூபாவும் உபசரணைப்பணம் 500 ரூபாவும் எல்லாமாக 2000 ரூபா மாதந்தோறும் அளிக்கப்படலாம்.

சாதாரண அங்கத்தவர்களுக்கு 700ரூபா வேதனம் உதவப்படலாம்.

செனேற்சபை அங்கத்தவர்களுக்கு 400 ரூபா வேதனமாம்.

பாராளுமன்றத்துத் தலைவருக்கு 1500 ரூபா வேதனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கந்தபுராணக் கவி நுட்பம்

திருவிளையாட்டுப் படலம்

வித்துவசிரோமணி ந. ச. பொன்னம்பலப்பிள்ளை யவர்கள் வாய்க் கேட் டெழுதப்பெற்ற பிரதியிலிருந்து எடுத்த அரும் பெருங் குறிப்புக்கள் இப் [ ] பகரக் குறியீட்டுடன் வெளியிடப்பட்டுள்ளன.

ஒல்லா தவரிற் பொருதேசில உம்பர் வீழ
நில்லா துடைந்து சிலதேவர்கள் நீங்க நேரில்
வில்லாளி யாகித் தனிகின்ற விசாகன் மேனுள்
எல்லா ரையுமட் டுலவுந்தனி ஈச னுத்தான்.

சில தேவர்கள் பகைவர்போல (முருகவேளை) எதிர்த்துப் போர் செய்து மாண்டொழிய, சில தேவர்கள் யுத்தத்தில் நிர்வகித்து நிற்றலாற்ருது புறங்கொடுத் தோட, ஒப்பற்ற வில்வித்தையிற் சிறந்தவராய்த் தனியே நின்றருளும் முருகக்கடவுள், சர்வசங்கார காலத்திற் சகலரையும் சம்மாரஞ் செய்து தாம் மாத்திரம் விளங்கும் சர்வசங்கார மகாருத்திர மூர்த்தியை யொத்தார் என்பது கருத்து.

ஒல்லாதவரில் - பகைவர்போல, முருகவேளை உள்ளபடி யறியும் ஞான மற்ருராய் ஒரு சிறுவனென் றெண்ணிப் பொருதா ராதலின், "ஒல்லாதவரில்" என்ருர்; நேரில் வில்லாளியாகி — வில்வலிமையில் தமக்கு ஒப்பா ரில்லாதவராய் என்றபடி; மேனுள் - சர்வசங்கார காலத்து.

[விசாகன் - விசாகநாளில் அவதரித்தவர்] (60)

சுரர்கள் யாருந் தொலைந்திட வென்றுதான்
ஒருவ னுகி யுமைமகன் மேவழி
யருளி னுரதனச்செயல் கண்டுவான்
குருவை யெய்திப் புகுந்தன கூறுவான்.

உமாதேவியாருடைய திருக்குமாரராகிய முருகமூர்த்தி (அங்குவந்து எதிர்த்தவர்க ளாகிய) தேவர்கள் அனைவரும் தொலைவுறும்படி வெற்றி கொண்டு தாம்மாத்திரம் உலகிடபொழுது, திருவருளின் வழி நாரதமுனிவர் அந்நிகழ்ச்சியைப் பார்த்து, தேவகுருவாகிய வியாழ பகவானை யடைந்து நிகழ்ந்தவற்றை யெடுத்துச் சொன்னுர் என்பது கருத்து.

தொலைதல் என்னுஞ் சொற்கு நீங்குதல், சாதல், என்னும் பொருள்களு முண்டானமையின், இங்கே சில தேவர்மாள, சிலதேவர் போர்க்குடைந் தோடினுராதலின் தொலைந்திட என ஆசாரியசுவாமிகள் சிலேடையாகக் கூறிய நுட்பங் காண்க. அருளின் இறைவனுடைய திருவருளினுல், நாரதமுனிவர் தேவகுருவாகிய வியாழனுக்கு இச்செய்தியைச் சென்று தெரிவிக்க வேண்டு மென்பதும், வியாழன் முருகமூர்த்தியிடம் வந்து வேண்டி அத்தேவர்களுக்கு அருள்புரிவிக்க வேண்டு மென்பதும் இறைவனருட் செய லென்றபடி; புகுந்தன - நேர்ந்த இடையூறுகள். வான்குரு - வானவர்க்குக் குரு. (61)

நற்றவம்புரி நாரதன் கூற்றினை
யற்ற மில்லுணர் வந்தணன் கேட்டெழீஇ
யிற்றதேகோல் இமையவர் வாழ்வேனுச்
சொற்று வல்லை துயருழந் தேகினுன்.

மேலான தவத்தைச் செய்கின்றவ ராகிய நாரத முனிவருடைய வார்த்தையை, சந்தேக விபரீதம் முதலிய சோர்வுகளற்ற ஞானத்தை யுடையவராகிய வியாழன் கேட்டு உடனே யெழுந்து, தேவர்களுடைய வாழ்க்கை முடிந்ததோ எனக் கூறிப் பெருங்கவலை கொண்டாராய் விரைந்து செல்வாராயினர் என்பது கருத்து.

நற்றவம் - அசுரர் இராக்கதர் செய்யுந் தவம்போலாது உலகோர்க்கு நன்மை பயக்குந் தவம்; அற்றம் இல் உணர்வு - சந்தேகம் விபரீதம் முதலிய சோர்வுக ளின்றித் தெளிவோடு கூடிய ஞான மென்றபடி; மூமுதற் கடவுளாகிய முருகமூர்த்தியை எதிர்த்துச் சமராடி மாண்டனராதலின், இவர்கள் இனி ஈடேறுதல் அரிது எனக்கொண்ட நிச்சயத்தினுல் இற்றதே ....வாழ்வு என இறந்த காலத்திற் கூறப்பட்டது: கொல், இங்கே இரக்கக் குறிப்பை யுணர்த்திநிற்கும் அசைச்சொல்: குறித்த தானத்தி லிருந்து பெருமான் மறைந்தருள முந்தியே தாம் அப்பெருமானைத் தரிசித்துத்தம் குறையை முறையிட வேண்டி விரைந்து சென்ருரென்பார், "வல்லை.... ஏகினுன்" என்ருர் (62)

ஆத பன்மதி யண்டர் தமக்கிறை
மாதி ரத்தவர் மால்கரி தன்னுடன்
சாதல் கோண்ட சமர்க்களந் தன்னிடைப்
போதன் மேயினன் பொன்னெனும் பேரினுன்.

சூரியன், சந்திரன், இந்திரன், திக்குப்பாலகர், மயக்கங்கொலை ஐராவத மென்னும் யானையுடன் செதுக்கிடக்கும் யுத்த களத்தின்கண் வியாழகுரு செல்வா ராயினர் என்பது கருத்து.

மாதிரத் தலைவருட் சாதல் கொண்டவர்: வருணன், யமன், வாயு, அக்கினி என்னும் நால்வர்; இத்தேவர்கள் மயங்கிக் கிடத்த லின்றிச் சமர்க்களத்தில் உயிர்மாண்டு கிடந்தன ராதலின் "சாதல் கொண்ட" என்ருர்; முருகவேளைத் தரிசிக்கப் புறப்பட்டபோது "வல்லை"யேகியவியாழன் யுத்தகளத்தை யடைந்த மாத்திரத்தே, அங்கே இந்திரனுஞ் சந்திரனுஞ் சூரியனும் வருணன் முதலிய திக்குப் பாலர்களும் அயிராவதமும் மாண்டு கிடப்பதை அவதானித்துக் கவலைப்பட்டுக்கொண்டு மெல்லச் சென்றன ராதலின் "போதன் மேயினன்" என்ருர். பொன், பொன்னவன் என்னும் பெயர்கள் வியாழனுடைய பொன்னிறத்தை யிட்டு எழுந்த காரணப் பெயர்களாம். (63)

மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

கப்பல் சீட்டு

[மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன]

யாழ்ப்பாணமிருந்து ரெயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினங் செல்ல டெக் ரிக்கற் ரூப ய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கோள்ளலாம்

வேறு செலவு உங்களுக்கு இல்லை

பல நூற்றுக்கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, சாங்கேசன்துறைரோட்
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

Std 33 2—9—47&28-2 48

யாழ்ப்பாணம் ஐக்கியலாபநிதி

1918-ம் ஆண்டு ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.
இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப் பணம் ரூபா

134,3670

100 ரூபா விகிதமான 8000 பங்குகள்

பங்குப்பணங் கட்டுமுறை.

மாசமொன்று 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக்கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்.

தினசரிப் பற்றுவரவு

எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானால் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்

க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1 விகிதம், 2 விகிதம் 4 விகிதம் 6 விகிதமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்தியாநோட்டு வட்டத்திற்கு மாற்றிக்கொடுக்கப்படும்.

கடன்.

நகைகள் நடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (இடுவைத்தவர்கள்) முதலையும் பாகம்பாகமாகக்கொடுக்கலாம். இன்னும் வேண்டிய விபரங்களை என்மூலமாக அறிந்துகோள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்.

Std. 14 20-11-46—20-11-47 (தி)

சைவம் வளர்த்த செம்பல்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

குலச்சிறையாருடைய சைவப்பற்றும் அடியார்பக்தியும் சம்பந்தப் பெருமானாலேயே தமது திருவாலவாய்த் தேவாரப் பதிகத்தில் ஆறு திருப்பாசுரங்களில் பாராட்டப்பட்டிருக்கின்றன என்றால் யாம் அவரைப்பற்றி என்னென்று கூறவல்லேம் திருத்தொண்டத் தொகையில் சுந்தரர் இவரைப் "பெரு நம்பி" என்று அழைக்கின்றார். நம்பி என்றால் ஆணிற் சிறந்தவன் என்பது பொருள். சுந்தரர்க்கும் நம்பி என்ற பெயர் உண்டு.

சம்பந்தர் இவரைப்பற்றிக் கூறிய அடிகளையும் கருத்தையுமே புராணமாக அமைத்துச் சேக்கிழார் பெரிய புராணத்தில் பாடியுள்ளார். ஏனைதேபோல் மங்கையர்க்கரசியாரின் புராணத்தையும் சற்று விரிவாகக் கூறியிருக்கலாம். ஆனால் சேக்கிழார் அம்மையார் புராணத்தை மூன்று திருவிருத்தங்களில்கூறி முடிக்கின்றார். மானியாரின் சரிதம் சம்பந்தர் புராணத்தில் முன்னரே வந்திருப்பதால் மீட்டும் விரிவுபடக் கூறவது மிகையென விடுத்தனர்போலும்.

குலச்சிறையாரையும் பாண்டிமாதேவியாரையும் யாம் பின்பற்றி சைவத்தை வளர்ப்போமாக.

கந்தசாமி வைத்தியர் அமிர்த சர்க்கரை லேகியம்

தாதுவிருத்தி யுண்டாகி நரசிங்கம் போன்ற தேக பலத்தைத் தருவதில் இணையற்ற லேகியம். நெடுநாட்பட்ட வாதங்கள் எவற்றையும் தீர்க்கும். பித்தக் கிறுதி பாண்டு குன்மம் நித்திரையின்மை மூளைக் குழப்பம் இருமல் அரிகுரல் குடற்புண் மலக்கட்டு மூலவாய்வு அசீரணம் இவைகளை மாற்றி நல்ல பசி உண்டாக்கும். மேகம் மேகத்தடிப்பு நீரழிவு நீர்க்கடுப்பு நீங்கும். கெற்பனிகட்கு உண்டாகும் வாந்தி அரோசியம் இருமல் மலசலக்கட்டு நீங்கும். கருவை அழியாமல் காக்கும். பாலர்கட்கு கணை பாண்டு இராக்காய்ச்சல் இருமல் தீர்க்கும் இணையற்ற சஞ்சீவி.

பெரியவர்கள் காலை மாலை 1 கழஞ்சு வீதம். சிறியவர்கள் காற் களஞ்சு அரைக்கழஞ்சு வீதமும் சாப்பிடலாம்

கால் ரூத்தல் விலை ரூபா 5-00

வி. பீ. பி யில் அனுப்புவோம்.

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி மெடிக்கல்ஹோல்
— வல்வெட்டித்துறை —

Std 25 1-7-47—30-6-48 (செ)

கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:
எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படாவிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6-6-48

விளம்பரம்

இப்பொழுது எங்கள் கைவசமுள்ள பற்கள் பிரபையுடையன; அழகிய இயற்கையானநிறமுடைய முரசு பொன்ற முரசோடு கூடியன; சாராசரி ½ அவுன்ஸ் நிறையுள்ள பற்கள் இறகுபோலப் பாரமற்றன; ஆனால் ஒருபோதும் உடையாதன; முரசில் இலகுவாக மாட்டத்தக்கன: எங்களிடத்தில் ஒருமுறை வாங்கி உபயோகித்தாற்றான் இந்த உண்மைகள் உங்ளுக்குப் புலப்படும்.

பத்திராஜ மாளிகை

[யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ கம்பனிக்கு எதிரேயுள்ளது]
யாழ்ப்பாணம்

Std 28 11-7—10-10-47.

இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

வாக்களிக்கப்பட்ட மூலதனம்	ரூபா	4, 500, 000, 00
கொடுக்கப்பட்ட வேதனம்	,,	3, 000, 000, 00
சேமநிதி	,,	2, 600, 000, 00

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியூயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்வின் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

நடைமுறைக்கணக்கு:-
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

சேமிப்புப் பணம்:-
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

நிரந்தர சேமிப்பு:-
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

நாணயமாற்று:-
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

பிறநாட்டு விவகாரப் பகுதி:-
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

T. S. முத்துலிங்கசாமி
ஏஜெண்டு,

(Std.29 1-8—30-7-48)

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna, on Tuesday, October 14 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org